7th September 1960]

Javadu Hill Tribes.

* 512 *Q.*—Sri S. M. ANNAMALAI கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-59-ம் ஆண்டில் கவர்னர் அவர்கள் வடஆற்காடு மாவட்டம் செங்கம், சென்றபோது ஜவ்வாது மலை மலைவாசிகளுக்குத் தனியாக தேசீய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று மக்களால் மனு கொடுக்கப்பட்டதா ?

(ஆ) அவர்களின் கோரிக்கைகள் யாவை ?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(ஆ) & (இ) Do not arise.

Elementary Schools (Gobichettipalayam)

* 513 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிபாளையத்தில் ஏற்படுத்தப்போகும் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலே ஆறு வயது முதல் ஏழு வயதான பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு லாயக்கான சிறுவர் சிறுமியர் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களுள் ஹரிஜன சிறுவர் சிறுமிகள் எத்தனை பேர் ?

(இ) மேற்கண்ட கோபிச்செட்டிபாளையம் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டு வரப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) 1,481 boys and 1,101 girls.

(ஆ) 271 boys and 203 girls.

(இ) Yes, Sir, in six revenue villages in 1960–61.

Soil testing.

* 514 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள "The Soil Testing Laboratory" மூலமாக எத்தனை தடவை "Soil Testing" செய்யப்பட்டது ?

(ஆ) விவசாயிகளிடமிருந்து "Soil Testing"-க்காக எத்தனை "Samples" அனுப்பப்பட்டன ?